# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ        அதிவிசேஷமானது

අංක 2199/18 - 2020 ඔක්තෝබර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.29

***2199/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## *காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்*

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2020 ஆம் ஆண்டின் 130 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : *4-3/6/2018/*HW/*451*
பி. செ. குறிப்பு இல. : DSB/LND/03/F1/*35*- XXII

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரக்கோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன.
காணி அமைச்சர்,

காணி அமைச்சு, ''மிஹிகத மெதுர'',
இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 12.

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், பெலிஅத்த.

*2.* **காணியின் விபரம்** : தென் மாகாணத்தின், அம்பாந்தோட்ட மாவட்டத்தில், பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவில், தெற்கு கிருவா பற்று சிறு பிரிவில், கெட்டமான கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2019.07.24 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இலக்கம் H/BLA/2019/410 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள்:

*01.* **துண்டு** A **– மஹஹேன – விஸ்தீரணம் : 0.0083 ஹெக்டயார்**

வடக்கு : இ. கி. வ. 296 (கெட்டமான) இல் துண்டு இல 1962, 1964 மற்றும் 1963 ; கிழக்கு : சுகத் பிரியன்த ஜயசேகர உரிமை கோரும் மஹஹேன ; தெற்கு : சுகத் பிரியன்த ஜயசேகர உரிமை கோரும் மஹஹேன மற்றும் இ. கி. வ. 296 (கெட்டமான) இல் துண்டு இல. 1960 ; மேற்கு : இ. கி. வ. 296 (கெட்டமான) இல் துண்டு இல. 1962 மற்றும் 1964.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013, யூலை மாதம் 17 ஆந் திகதிய 1819/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 230 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) இன் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளதாக அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளின் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/6/2012/HW/281
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 12.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 486 ஏ, ஹோமாகம கிராம அலுவலர் பிரிவில், ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க. தி. 520001, வலயம் 19, தாள் இல. 43 மற்றும் 2019.02.23 ஆந் திகதிய கடற் திரள் வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லையினுள் அமைந்துள்ள காணித்துண்டு :

**01. துண்டு இல. 924 - கெந்தலந்த - விஸ்தீரணம் : சுமார் 0.0004 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 557 மற்றும் 923 ; கிழக்கு: துண்டு இல. 923 மற்றும் 555 ; தெற்கு: துண்டு இல. 925 ; மேற்கு: துண்டு இல. 557.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.